DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 383/2020** |
| Deposition of Witness for | : PW 9 |
| Name | : திரு.யோபு சம்பத் ராஜன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.06.2026. |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 24 June 2026.

எதிரி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர்.

**முதல்விசாரணை:**

நான் தற்போது திருவேங்கடம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2019 வருடம் அய்யாபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது கடந்த 17.12.2019-ம் தேதி 14.00 மணிக்கு முதல்நிலைக்காவலர் கிருஷ்ணமூர்த்தி என்பவர் நிலையப்பொறுப்பில் இருந்தபோது சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைத்த தகவலின் பேரில் அங்கு உள்நோயளியாக சிகிச்சையில் இருந்த சாயமலை பச்சேரி

தெற்கு தெருவை சார்ந்த கருப்பசாமி மகன் வேல்சாமி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்றுஅதன்தன்மைக்கேற்ப காவல்நிலையக்குற்ற எண்.92/2019 இ.த.ச.பிரிவுகள் 294(பி), 323, 324, IPC–ன்படி முதல்தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்னர் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அதனைத் தொடர்ந்து, அன்றையதினமே 15.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் அருண்குமார் மற்றும் கனகராஜ் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ.7 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. பின்னர் சாட்சிகள் வேல்சாமி, காளிப்பாண்டி, சாமி, அருண்குமார், கனகராஜ் மற்றும் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த முதல்நிலைக்காவலர் கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் பணிமாறுதல் பெற்றதால் விசாரணனை முடித்து மேல் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ஜெயப்பாண்டின் என்பவரின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக உதவி ஆய்வாளர் ஜெயப்பாண்டியன் என்னை விசாரணை செய்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

அ.சா.1 கொடுத்த புகார் மனுவில் முதல் தகவல் அறிக்கையிலும் அ.சா.1 வலது காலிலும், இடது கை மணிக்கட்டின் மேல் பக்கம் மற்றும் கீழ் பக்கம் ஆகிய 3 காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முலங்கையிலோ, விரலிலோ ஏதாவது காயம் ஏற்பட்டதாக புகார் வாக்குமூலத்திலோ முதல் தகவல் அறிக்கையிலோ, துலங்காது என்றால் சரிதான். அ.சா.1 தன் கொடுத்த புகார் வாக்குமூலத்திலோ,

விசாரணையிலோ பொது இடத்தில் வைத்து அசிங்கமாக பேசியதால் தனக்கு அவமணம் ஏற்பட்டதாக கூறினாரா என்றால் கூறவில்லை. இந்த வழக்கு சம்மந்தப்பட்ட கம்பையோ, கல்லையோ கைப்பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. அ.சா.1 தன்னை உருட்டு கட்டையால் தாக்கியதாக புகார் வாக்குமூலத்திலோ, போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரிதான். எந்த வகையான கல் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த மூலகாரணம் மகாலட்சுமிதான் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் மகாலட்சுமியுடன் எதிரி தகாத உறவில் இருந்ததால் தான் எதிரியின் மீது குற்றநோக்கத்தில் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் மகாலட்சுமியையோ, அவரின் கணவர் பாக்கியராஜ்யையோ சாட்சியாக விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். மகாலட்சுமிக்கும் எதிரிக்கும் என்ன உறவு முறை என்று விசாரித்தீர்களா என்றால் விசாரிக்கவில்லை. இந்த சம்பவ இடத்தின் பக்கத்தில் லட்சுமி வீடு, காசி வீடு, மாடசாமி மற்றும் இசக்கி வீடு அகியவர்களின் வீடுகள் உள்ளன இவர்கள் யாரையும் சாட்சியாக விசாரித்தீர்களா என்றால் இல்லை. அ.சா.1–க்கும் எதிரிக்கும் இடம் சம்மந்தமாக பிரச்சினை ஏற்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரியுடைய வீடும், அ.சா.1–ன் வீடும் எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு ஞாபகம் இல்லை. எனது ஆவணங்களில் எதிரியுடைய வீடும், அ.சா.1–ன் வீடும் எங்கு உள்ளது என்ற விபரம் துலங்குமா என்றால் துலங்காது. மருத்துவமனைக்கு அ.சா.1 என்ன வாகத்தில் சென்றார் என விசாரித்தீர்களா என்றால் ஆட்டோவில் சென்றதாக கூறியுள்ளார். அ.சா.1 காவல் நிலையம் வந்து நடந்த சம்பவத்தை கூறியதாக துவலங்குமா என்றால் துலங்காது. அ.சா.1–க்கு மருத்துவ நமுநா கொடுக்கவில்லை

என்றால் சரிதான். நான் இன்டிமேசனை பார்தேனா என்றால் பார்க்கவில்லை. இன்டிசேன், முதல் தகவல் அறிக்கை, வாக்குமூலம் ஆகியவற்றை இணைத்து தான் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றால் சரிதான். மருததுவமனை போகும் காவலருக்கு கடவுச்சீட்டு போட்டுதான் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். அந்த கடவுசீட்டை பார்த்தால் தான் எத்தனை மனிக்கு காவல் நிலையத்தில் இருந்து புறப்பட்டு சென்றார், மருத்துவமனைக்கு சென்றார் என்பது கடவுசீட்டை பார்த்தால் தான் தெரியும் என்றால் சரிதான். அந்த வழக்கில் கடவுசீட்டு எதுவும் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதா என்றால் அனுப்பப்படவில்லை. நான் முதல்விசாரணையில் கூறிய நாள் நேரத்தில் புகார் மனுவைப் பெற்று வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றாலும், சம்பவ இடம் சென்று பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றாலும், அரசுதரப்பு சாட்சிகளை விசாரணை செய்யவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை இல்லை</u>**

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil.